ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

न लभन्ते विनोद्योगं जन्तवस्सम्पदां पदम् ।
सुराः क्षीरोदविक्षोभमनुभूयामृतं पपुः ॥ सुभाषितरत्नभाण्डागारे.

உலகிலுள்ள சகலப்பிராணிகளுக்கும் எந்தக் காரியத்திலும் விடாமுயற்சியிருந்தால் மட்டில் ஸித்தியேற்படுமேயன்றி முயற்சி குன்றினால் பயன்கிட்டாது. விண்ணவர்கள் அமுதத்தை யுண்ணவேண்டி பாற்கடலை கடையும்போது பலமான இடையூறு ஏற்பட்டும் அதைப் பொருட்டாகக் கருதாமல் தங்கள் காரியத்தை நடத்தியபடியால் அமுதத்தைப்பெற்று ஆனந்தமாய் உண்டார்கள்.

ஏதாகிலுமோர் நற்கார்யத்தைத் துவக்குங்கால் மனோதிடமும் புத்திபலமுமில்லாத சில சோம்பேரிகள் நம்மால் இந்தக்கார்யம் நடத்தமுடியாது இதில் பலவிதவிக்னங்களேற்படுமாகையால் ஆரம்பம்செய்து மத்தியில் நிறுத்துவதைக்காட்டிலும் ஆரம்பம் செய்யாமலிருப்பதே நலமென்று கருதி விட்டுவிடுவார்கள். இக்கருத்தையே

प्रारभ्यते न खलु विघ्नभयेन नीचैः
प्रारभ्य विघ्ननिहता विरमन्ति मध्याः ।
विघ्नैर्मुहुर्मुहुरपि प्रतिहन्यमानाः
प्रारब्धमुत्तमगुणा न परित्यजन्ति ॥

தைர்யமில்லாத சில மந்தபுத்தியுடைய ஜனங்கள் விக்னமேற்படுமென்று பயந்து ஒன்றையும் நடத்த முன்வருகிறதில்லை. மத்தியாதிகாரிகள் ஓர் கார்யத்தை ஆரம்பம்செய்து மத்தியில் விக்னத்தால் தடுக்கப்பட்டவர்களாய் கொண்டு நிருத்திவிடுகிறார்கள், உத்தமகுணமுடையோர்கள் அடிக்கடி பல இடையூறுகள் நேர்ந்தாலும் எத்தனித்த காரியத்தைப் பூர்த்திசெய்யாமல் விடமாட்டார்கள் என்று ஓர் வித்வானும் கூறியிருக்கிறார். ஆகையால் விடாமுயற்சியிருந்தால் எந்தகாரியமும் ஸித்திபெரும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்தஸாரம்.

(115-வது பக்கத்தொடர்ச்சி)

(4) திதிக்ஷா:—திதிக்ஷை என்றால் பொறுமை, சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், முதலானவைகளை ஸகிக்கவேண்டும். திதிக்ஷா—சகித்தல்,

सहनं सर्वदुःखानामप्रतीकारपूर्वकम् ।
चिन्ताविलापरहितं सा तितिक्षा निगद्यते ॥
आध्यात्मिकादियद्दुःखं प्राप्तं प्रारब्धवेगतः ।
अचिन्तया तत्सहनं तितिक्षेति निगद्यते ॥

முற்பிறவிகளில் செய்தவைகளும், பலத்தைஅளிக்க முன்வந்தவைகளும், அதிக வேகத்துடன் கூடியவைகளுமான கர்மாக்களால் நமதுசரீரத்தில் ரோகம் முதலானவைகளாலோ, புலிமுதலிய துஷ்டமிருகங்களின் ஹிம்ஸையாலோ, ஆகாயத்திலிருந்து விழும் இடிமுதலானவைகளாலோ, எவ்வித கஷ்டங்களேற்பட்டாலும் அவைகளுக்கு யாதொருபரிஹாரமும், செய்யாமலும், 'இவ்விதம் நமக்கு நேர்ந்துவிட்டதே என்செய்வேன்' என்று பலவாறாகச் சிந்திக்காமலும், வாய்விட்டுக்கதறாமலும், இவைவருவதற்கு முன்னிருந்த ஸ்வபாவமான நிலைமையில் விகாரமின்றி இருப்பதே திதிக்ஷையாகும் மோக்ஷமார்க்கத்தில் செல்வோர்களுக்கு இதுமிகவும் சிறந்தஸாதனம். இக்கருத்தையே

रक्षातितिक्षासदृशी मुमुक्षोर्नविद्यतेऽसौ पविना न भिद्यते ।
यामेव धीराः कवचीव विद्वान् सर्वांस्तृणीकृत्य जयन्ति मायाम् ॥

ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபட்டு மோக்ஷம்என்னும் பரமபுருஷார்த்தத்தை அடைய விரும்புவோர்களுக்கு திதிக்ஷைக்குச் சமமான வேறுஸாதனமில்லை. தீரபுருஷர்கள். எதையும் சுலபமாய் பிளக்கும் சக்திவாய்ந்த வஜ்ராயுதத்தால்கூட பேதிக்கமுடியாத கவசத்தைப்பூண்டு எவ்வித விக்னங்களையும் பொருட்டாகக் கருதாமல் ஜயிப்பதுபோல் இந்ததிதிக்ஷை என்கிற பொறுமையைக் கவசமாகப் பூண்டதீரர்கள், சகல லோகங்களையும் தனக்குவசமாகச் செய்துகொள்ளும் சக்தியையுடைய மாயையைத் திரணமாக வெண்ணி வெகுசுலபமாக ஜயித்துவிடுகிறார்கள்.

तितिक्षया तपो दानं यज्ञस्तीर्थं व्रतं श्रुतम् ।
भूतिः स्वर्गोऽपवर्गश्च प्राप्यते तत्तदर्थिभिः ॥

தவம், தானம், வேள்வி, புண்யதீர்த்தம், விரதானுஷ்டானம்,சாஸ்திரம், ஐசுவர்யம், ஸ்வர்க்கம், மோக்ஷம் முதலியவைகளில் எவரெவர்கள் எதைவிரும்பினாலும் திதிக்ஷை என்கிற இந்தஸாதனத்தால் சுலபமாய் அடையமுடியும்.

तस्मान्मुमुक्षोरधिका तितिक्षा सम्पादनीयेप्सितकार्यसिद्धये ।

ஆகையால் மோக்ஷத்தையடைய வேண்டும் என்று இச்சிக்கிறவர்களுக்குத் தங்களிஷ்டம் ஸித்திக்கவேண்டியதின் பொருட்டு திதிக்ஷை என்கிற ஸாதனத்தை அவசியம் பெறவேண்டும்.

(5) ஸமாதானம்:—

निगृहीतस्य मनसः श्रवणादौ तदनुगुणविषये च समाधिस्समाधानम् ।

வெளியிலுள்ள விஷயங்களில் விடாமல்தடுத்து ஸ்வாதீனம் செய்யப்பட்ட மனத்தை சிரவணம், மனனம் முதலானவைகளிலும் இவைகளுக்கு அனுகூலமான விஷயங்களிலும் செல்லும்படி செய்வது ஸமாதானமாகும். சமாதானம்—அமைதி

सिद्धेश्चित्तसमाधानमसाधारणकारणम् ।
यतस्ततो मुमुक्षूणां भवितव्यं सदामुना ॥

மோக்ஷத்தில் விருப்பமுடையோர்களுக்கு அதுசித்திக்க வேண்டு

மானல் சித்தத்திற்கு சமாதானமென்பது முக்கியமான காரண மாகையால் அஃது அவசியமிருக்கவேண்டும்.

सम्यगास्थापनं बुद्धेः शुद्धे ब्रह्मणि सर्वदा ।
तत्समाधानमित्युक्तं न तु चित्तस्य लालनम् ॥

"யாதொரு தோஷமுமின்றிச் சுத்தமாய் விளங்கும் பரம் பொரு ளிடத்தில் தனது புத்தியை எப்பொழுதும் திருடமாய்ப் பற்றுத லடையும்படி செய்வதே ஸமாதானம்" என்று சொல்லப்படுகின் றது. இவ்விதமில்லாமல் "நமதுபுத்திக்குச் சிரமத்தைக் கொடுக் கக்கூடாதென்று லாலனைசெய்வது ஸமாதானமாகாது" என்று பெரியார் கருதுகின்ருர்.

अत्यन्ततीव्रवैराग्यं फललिप्सा महत्तरा ।
तदेतदुभयं विद्यात् समाधानस्य कारणम् ॥

ஒருவன் சித்தத்திற்குச் சமாதானமேற்பட வேண்டுமானல் மிக வும் அதிகமான வைராக்கியமும், எவ்வித சிரமம் நேர்ந்தாலும் நாம்கோரிய பலத்தை அவசியம் அடையவேண்டுமென்கிற அதி கமான அவாவும் இருப்பின் ஸமாதானம் சுலபமாய் ஏற்பட்டு விடும். இதுவும் இருக்கவேண்டும்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

தீண்டாமையை ஒழித்தல்.

[21-2-25-ல் கோனேரிராஜபுரம் ஸ்ரீமான். எஸ். ராதா கிருஷ்ணய்யர் அவர்களால் சுதேசமித்திரனில் வரையப் பட்ட **தீண்டாமையை ஒழித்தல்** என்கிற விஷயமாய் எழு தப்பட்ட ஆக்ஷேபணையின் சுருக்கம்.]

காங்கிரஸ் விஷயத்தையும் ராஜீயவிஷயத்தையும் ஒன்ருகக் கலக்கக் கூடாதென்றும் அதினல் பலகஷ்டங்கள் நேருகின்றன

வென்றும் விஸ்தாரமாய் ஆதியில் நிரூபித்து, இந்தியாவில் இவ்விரண்டையும் ஒன்ருகச்சேர்த்து விட்டார்கள். திருஷ்டாந்தமாக இவ்வருஷத்திய காங்கிரஸ்ஸை எடுத்துக்கொள்வோம். அதில் முடிவான தீர்மானங்களில் முக்கியமானது நூல்நூற்றல் தீர்மானமும் தீண்டாமையை யொழிப்பதும்தான் என்று காண்பிவித்து நூல்நூற்கும் விஷயமாய் அற்பம் மொழிந்து பிறகு தீண்டாமையைப்பற்றி கூறுகிறதாவது.

இரண்டாவதாக "தீண்டாமையை விலக்கவேண்டும்" என்பது. மேற்படி விஷயமாக மிகவும் பலத்தஅபிப்பிராயபேதம் இருந்து வருகிறது. தீண்டாமை என்ருல் என்ன? தீணடக்கூடாதவர்கள் என்ருல் யார்? அவர்களுக்கு மேற்படி கதி நேர்ந்தற்குக் காரணம் என்ன? என்பதை ஒன்றையும் தெரிவிக்காமல் பிரபல தலைவர்களெல்லாம் தீண்டாமை ஹிந்து மதத்திற்கே ஓர் பெருத்த அவமானமென்றும், சாஸ்திரத்திலேயே கிடையாதென்றும், ஆகையால் தீண்டாமையை அவசியம் ஒழிக்கவேண்டும் என்றும் உருப்போட்டுக் கொண்டிருக்கிருர்கள். சூர்யகுலத்தை முதலில் ஆண்டுவந்த மனு என்ற ஓர் அரசரால் ஓர் தரும சாஸ்திரம் எழுதப்பட்டிருக்கிறது. ஹிந்துக்களுடைய தர்மங்கள், பழக்க வழக்கங்கள், சட்டங்கள் முதலிய சகல விஷயங்களும் அதில் நன்ருகவும், வியக்தமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதை அனுசரித்துத்தான் இந்தியாவில் உள்ள சகலஅரசர்களும் ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டு வந்திருக்கிருர்கள். உதாரணமாக ஓர் அரசனுடைய ராஜ்ய பரிபாலனத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது "மனுநீதி தவருமல் செங்கோல் செலுத்திவந்தான்" என்று இப்பொழுதும் சொல்வதுண்டு. அவரால் செய்யப்பட்ட ஸ்மிருதியில், கிரந்த எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கிற நான்காவது அத்தியாயம் 60-வது சுலோகத்தையும், 79-வது சுலோகத்தையும் மேற்படி தலைவர்களைத் தயவு செய்து பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படியிருக்க, மேற்படி தீண்டாமை விஷயமாய் மேற்படி தலைவர்களுக்கு ஒன்றுமே தெரியாதென்றே தான் நினைக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் சொல்லுகிறபடி ஒரு சாஸ்திரத்திலும் ஐந்தாவது ஜாதி என்று ஒன்று சொல்லப்

படவில்லை தான். பிராம்மணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்று நான்கே ஜாதிகள் தான் வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றன. *ஆனால் பாப கர்மாக்களினாலும் கெட்ட செய்கைகளினாலும் சிலர்கள் ஒருகர்மாக்களுக்கும் லாயக்கில்லை என்று கிராமங்களுக்கு சற்றுதூரத்தில் ஒதுங்கி இருக்கும்படி ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மேற்படி கர்மாக்களினால் ஒதுக்கப்பட்டவர்கள் கர்ம சண்டாளர்கள் என்றும் பெயர். மேற்படியார்கள் ஒரு விதமான கர்மாக்களுக்கும் லாயக்கற்றவர்கள். அவர்களைத்தான் நாம் இப்பொழுது தீண்டாதவர்கள் என்று சொல்லுகிறோம். அவர்கள் தங்களுடைய சொந்த நன்மையை உத்தேசித்தே கிராமங்களுக்குச் சிறிது தூரத்திற்கப்பால் விலகி இருக்கவேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறதேயொழியவேறல்ல. முன்னோர் காலம் முதல் இருந்துவந்த வழக்கத்தைமாற்றுவ தென்பது மிகவும் தப்பான காரியம். சிலர் தீண்டாமையை ஒழித்தால் தான் சுயராஜ்யம் வரும், இல்லாவிட்டால் வராதென்று பயமுறுத்துகிறார்கள். தீண்டாமையை ஒழித்து அதனால் சம்பாதிக்கப்போகும் சுயராஜ்யமானது தீண்டாமையை ஒழிக்காமல் இருந்துகொண்டு சம்பாதிக்கக் கூடிய சுயராஜ்யத்தைப் போல் அவ்வளவு நீடித்தும் சாசுவதமாயும் இருக்க முடியாதென்பது நிச்சயம். முற்காலத்தில் நம் இந்தியாவில் ராஜ்ய பரிபாலனம் செய்துவந்த சந்திர சூரியவமிசத்தரசர்கள் காலத்திலேயும் இத்தீண்டாமையை வைத்துக் கொண்டேதான் அவர்கள் ஏகசக்ராதிபத்யம் செய்துவந்தார்கள். தீண்டாமையை ஒழிப்பதினாலும், நூல் நூற்பதினாலும் ஒருநாளும் சுயராஜ்யம் வந்து விடாது. தீண்டாமையை ஏன் விலக்கவேண்டும்? மேற்படியார்கள் தங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஒருநாளும் சொல்லமாட்டார்கள்.

---

*தீண்டாதவர் என்கிற ஒருஜாதி வேதத்தில் கூறவில்லை என்பது தவறு. ஐந்தாவது என்ற எண்ணிக்கையில்லாமலிருக்கலாம். இவ்விஷயத்தையும் இன்னும் பல் வினாக்களுக்கு விடைகளும் எம்மால் வெளியிடப்படும் ஜாதிநிர்ணயம் இரண்டாம் பாகமான தீண்டாமை விசாரம் என்னும் புஸ்தகத்தில் விரிவாய்க் காணலாம்.

உபபத்திராதிபர்.

அவர்களுக்கு இருக்கும் சௌக்கியமும், வசதியும் பாக்கியுள்ள இதர ஜாதிகளுக்கு இருக்காது. அதாவது கிராமங்களுக்கப்பால் நல்ல காற்றுள்ள ஓர் மேடான இடத்தில் சிறு குடிசைகளைக் கட்டிக்கொண்டு யாதொருவிதமான வியாதியும் அன்னியில், சௌக்கியமாயிருக்கிறார்கள். அவர்களுக்குப்பயிரிடும்தொழில். அவர்கள் ஓர் மிராசுதாரின் கீழ் வேலைசெய்து வருகிறார்கள். பயிர் செய்து அதனால் உண்டாகும் வரும்படியைக்கொண்டு காலக்ஷேபம் செய்துகொண்டு வருகிறார்கள். அதைத் தவிர தீபாவளி, பொங்கல் முதலிய விசேஷதினங்களில் மேர்படியார்களின் மிராசுதார்கள் அவர்களுக்கு வேஷ்டியும் அவர்களின் பெண்சாதிகளுக்குப் புடவை, முதலியதுகளும் இனும்கொடுக்கிறார்கள். அப்படியிருக்க அவர்களுக்கு என்னகுறை வந்தது? தீண்டாமை என்பது மகா பாபமான காரியமென்றும் மேற்படியார்களை மிகவும் குரூரமாக நடத்துகிறார்கள் என்றும் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதின் காரணம் புரியவில்லை. இப்படிச் சொல்லுகிறவர்கள் பாப புண்யங்களை நன்றாகத் தெரிந்துகொள்ள வில்லையென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. தீண்டாதவர்களைத் தனியாக வைத்திருப்பதால் ஓர் காரணத்தைக் கொண்டே தீண்டாமை குரூரமானது என்று மேற்படி தலைவர்கள் நினைக்கிறார்கள் போலும். ஆனால் தீண்டாதவர்களோ அப்படி அல்ல. இன்றைக்கும் மேற்படியார்கள் வசிக்கும் தெருக்களில் யாராவது பிராமணர் தெரியாமல் வந்துவிட்டால் மேற்படியார்களை உள்ளே செல்லவிட மாட்டார்கள். ஏனென்றால் மேற்படி தெருவில் உள்ள லட்சுமிகளை போய் விடுமென்றும். தெருவே க்ஷீணித்து விடுமென்றும், அவர்களின் அபிப்பிராயம். சிலபேர்கள், தீண்டாதவர்களை அசுத்தமாயும், இறந்த மாட்டின் மாமிசத்தை சாப்பிடுவதினாலும், தனியாக வைத்திருக்கிறோம். ஒன்று தப்பாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைவிட அசுத்தமானவர்களை நாம் தெருக்களில் விடவில்லையா ? உதாரணமாக முனிசிபாலிடி தோட்டிகள் இருக்கிறார்கள். எதைக்கண்டால் மனதிற்கு ருச்சிக்காதோ அதே வஸ்துவை ஷெ தோட்டிகள் சதா அள்ளிக்கொண்டும், மனதிற்குப் பிடிக்காத இடங்களிலேயே வேலை செய்துகொண்டும், நல்ல

காற்று இல்லாமலும், சந்துஷ்டியே கொஞ்சங்கூட இல்லாமலும் இருக்கிறார்கள். அவர்கள் சதா நரகவேதனையையே அனுபவித்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகையால் தீண்டாதவர்களைக் காட்டிலும் இவர்களின் நிலைமைதான் மிகவும் துக்கமாயும், பரிதாபகரமாயும் இருக்கிறது. அப்படியிருக்க இவர்களை நம் தெருக்களில் விடவில்லையா ? ஆகையால் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று சதா உருப்போட்டுக்கொண்டிருக்கும் பிரசங்கிகள் இவர்கள் விஷயத்தில் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டு முயற்சிசெய்தால் அது பரோபகாரமாயிருக்கும். அப்படியிருக்க, தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பது நியாயமும் தர்மமுமாகாது. தீண்டாதவர்கள் தங்களைக் கோயிலுக்குள் விடவேண்டுமென்றும் தெருக்களில் விடவேண்டுமென்றும் யாதொரு தலைவர்களையும் போய்க் கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள், கேட்கவும் மாட்டார்கள். இவர்களாகக் கேளுங்கள், என்று சொல்லிக்கொடுத்தாதொழிய ஒருநாளும் கேட்கமாட்டார்கள். ஆனால் ஷை தலைவர்கள் இந்தியாவிற்கு சுயராஜ்யம் வந்துவிட்டதாகவும், தீண்டாமையென்ற ஓர் கெட்டவழக்கத்தை நிவர்த்திசெய்தால்தான் ஷை சுயராஜ்யம் நிலைக்கும் என்றும் மனப்பால் குடித்துக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் இப்படிச் சொல்வதைக்காட்டிலும் தீண்டாதவர்களைத் தங்கள் தங்கள் வீடுகளிலேயே வேலைக்கமர்த்திக் கொண்டுவிடலாம். ஷையார்களின் உத்தேசம் இந்தியாவிலுள்ள மதங்களைச் சீர்கேடாகச்செய்து சர்வ மதங்களையும் ஒன்றாக்ச் சேர்த்து வர்ணாசிரம தர்மங்கள் அழியவேண்டும் என்று நினைப்பதாகத்தான் தோன்றுகிறது. இந்தியாவிற்கு சுயராஜ்யம் சம்பாதிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இந்தியாவில் உள்ள சர்வ மதங்களையும் அதனுடைய கொள்கைக்குமாராகத் தூண்டிவிட்டு இந்தியாவானது கூடிய சீக்கிரத்தில் நாசத்தை அடையும்படி செய்யவே வந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. இப்பொழுது பிராமணரல்லாதாரிலேயே அநேகம் உட்பிரிவுகள் இருக்கின்றன. அவைகளில் ஒரு வகுப்பிலுள்ளவர்கள் இன்னொரு வகுப்பைச் சேர்ந்தவர்களுடன் சரிசமத்துவமாய் இருப்பதில்லை. அதேபோல் தீண்டாதவர்களிலும் மறையர்கள்

என்றும் பள்ளர்கள் என்றும் சில வகுப்புகள் இருக்கின்றன. அவர்களே ஒருவருக்கொருவர் கொள்வன கொடுப்பன முதலிய வைகளை வைத்துக்கொள்வதில்லை. அப்படியிருக்கும் நிலைமையில் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து இருக்கவேண்டுமென்றால் அது எப்படி சாத்தியமாகும் என்பதை ஷை தலைவர்கள் அறியவிரும்பு கிறேம். அப்படி ஒன்றாக எல்லோரும் வாழாவிட்டால் அது மிகவும் தப்பென்றும், அவமானமென்றும் பிறதேசத்தார் நம்மை இழிவாக் நினைக்கிறார்கள் என்றும் சொல்வதன் காரணம் புரிய வில்லை. அதுமிகவும் நியாய விரோதமானதும் மதங்களை நாசஞ் செய்வதாகவும் ஆகும். மேற்படி தீண்டாதவர்களிடத்தில் நமக்கு ஒருநாளும் துவேஷ மென்பதே கிடையாது. உதாரணமாக தைப் பூசம் முதலிய சில விசேஷ உத்ஸவ காலங்களில் மேற்படியார்க ளோடு நாம் சேர்ந்து கொண்டு, மேற்படியார்களால் இழுக்கப் படும் தேர்களின் மத்தியில் நாமும் சேர்ந்தாற்போல் நின்று கொண்டு வேடிக்கை பார்க்கவில்லையா? அப்படியிருக்க மகா த்மா காந்தி முதலியோர்கள் மேற்படி தீண்டாதவர்களைக் கோயி லுக்குள் விடவேண்டும், எப்போதும் அவர்களோடு சேர்ந்தே இருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அது நியாயமும், சாஸ்திரசம்மதமுமாகாது. மேற்படி பெரியோர்கள் இன்ன கார ணத்திற்காக இப்படிச்சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை. நா னும் ஓர் காங்கிரஸ் வாதிதான். கதர்தான் கட்டுகிறேன். எனக்கு காங்கிரஸினிடத்திலும் மகாத்மாவினிடத்திலும் அதிகமான பிரி யமும் நம்பிக்கையும் உண்டு. அப்படி இருக்க இத்தீண்டாமை விஷயத்தில் மட்டும் எனக்கும் இன்னும் காங்கிரஸ்காரர்களாகிய அநேக நண்பர்களுக்கும் மகாத்மா காந்தியினிடத்தில் முன் இருந்த நம்பிக்கையும் பிரியமும் குறைந்து விட்டது. இவ்விடத் திலுள்ள ஜனங்கள் "காந்தி என்றும் எல்லோரும் கொண்டாடி னீர்களே. சுயராஜ்யம் என்று சொல்லிக்கொண்டு ஜாதிமதங்க ளையும், ஜாதிகளையும் ஒன்றாக வாழவேண்டுமென்றும் சமமாக இருக்கவேண்டும் என்றும் சொல்வதைப் பார்த்தீர்களா. இது தான் காந்தியினால் நாமடைந்த கைகண்டபல" னென்றும், பெ ஸண்டை கொஞ்சகாலம் எல்லோரும் கொண்டாடினீர்கள் பிறகு

காந்தியைக் கொண்டாடிக் கொண்டிருந்தீர்கள். இனி யாரைக் கொண்டாடப் போகிறீர்கள்." என்றும் பரிகாசம் செய்கிறார்கள். எல்லோராலும் போற்றப்பட்டு வந்த ஓர் தலைவரைப்பற்றி இப்படிச் சொல்வதை நினைக்க மனதிற்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. சுயராஜ்யம் என்றால் அவரவர்கள் மதத்தின் கட்டளையின்படி ஜாதி வருணாசிரமங்கள் தவறாமல் எல்லோரும் சந்தோஷமாக வாழவேண்டுமே தவிர எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து சர்வ மதங்களையும், அதன் ஆசாரங்களையும் அழித்து அதன்படி எல்லோரும் இருக்கவேண்டும் என்பதல்ல.

10-1-25-சனிக்கிழமை அன்றுவெளியான மித்திரனில் மகாத்மாகாந்தியானவர் கத்தியவார் சமஸ்தானம் பவநகர் மகாநாட்டில் பேசிய சிலவிஷயங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அதில்மேற்படி பெரியோர் "ராமராஜ்யம்" என்ற தலைப்பின்கீழ் பேசியிருப்பதாகத் தெரிகிறது. ராமரைப்போல் ஒரு அரசரும் கிடையாதென்றும் அவ்வளவு நன்றாக ராஜ்யபரிபாலனம் வேறொருவராலும் செய்யமுடியாதென்றும் சொன்னதோடு, ஓர் வண்ணான் பேச்சைக் கேட்டுக்கொண்டு தன்னுடையஉயிருக்கு சமானமான சீதையைராமர் பகிஷ்கரித்தார் என்றும், ஆகையால் ராமரைப்போல் அரசர் இருக்கவேண்டும், குடிகளும் அவருடைய இராஜ்யத்தில் இருந்தாற்போல் இருக்கவேண்டுமென்றும் சொல்லியிருப்பதாக தெரிகிறது. ஆனால் ஸ்ரீமத் வால்மீகிராமா யணத்தில் மகாத்மாகாந்தி சொல்லியபடி, வண்ணான் பேச்சைக் கேட்டுக்கொண்டு ராமர் சீதையைப் பகிஷ்கரித்ததாகச் சொல்லப்படவில்லை. ஆனால் பொதுவாக வேவுகாரர்கள் மூலமாக, பட்டணத்து ஜனங்கள் ஏதோ ஓர் தப்பபிப்பிராயத்துடன் சீதையை இராமர் சேர்த்துக்கொண்டது பிசகு என்று சொல்லிக்கொண்டிருப்பதாக அறிந்து அந்த அபவாதத்திற்காகப் பகிஷ்கரித்தாரே யொழிய வண்ணான் பேச்சைக் கேட்டுக் கொண்டு அல்ல என்று தெரியவருகிறது. மகாத்மா காந்தியானவர் எந்த அபிப்பிராயத்துடன் ராமர் சீதையை பகிஷ்கரித்தார் என்று நன்றாகச் சொல்வதோடும் கூட கீழ்க்கண்ட கதையும் மேற்படி மகாநாட்டில் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதாவது:—

ராமன் இராஜ்ய பரிபாலனம் செய்யும்பொழுது ஓர் வயோதிக பிராமணனுடைய குழந்தை 14-வயது ஆவதிற்குள் அகால மரணமடைந்துவிட்டது, உடனே பிராமணர் தன்னுடைய குழந்தையை எடுத்துக்கொண்டு ராமனுடைய ஆசார வாயிலில் வந்து கதறினார். “இது என்ன அநியாயம் நான் ஒரு பாபமும் செய்ய வில்லை. அப்படி இருக்க என் குழந்தை அகாலத்தில் மரணமடைவதற்குக் காரணம் என்ன? நீ ராஜ்யபரிபாலனம்செய்யும் ஒழுங்கு இதுதானா” என்று அங்கே அவர் பிரலாபித்தார். உடனே ராமன் அநேக ரிஷிகளுடன் இதைப்பற்றி மந்திராலோசனை செய்யும் பொழுது, நாரதர் யுகதர்மத்தைப் பற்றிச்சொல்லி, அந்த யுகத்தில் சூத்திரர் தபஸ் செய்யக்கூடாதென்றும், அப்படி இருக்க எங்கேயோ ஓர் சூத்திரர் தபஸ் செய்து கொண்டிருக்கிறார் என்றும் அதனால்தான் இந்த அகாலமரணம் ஏற்பட்டது என்றும், கலியுகத்தில் சூத்திரர்கள்கூட தபஸ் செய்வார்கள் என்றும் சொன்னார். உடனே ராமர் லட்சுமணருடன்போய் மேற்படி சூத்திரர் எவ்விடத்தில் தபசு செய்கிறார் என்று பார்த்துக்கொண்டே வரும்பொழுது, தெற்குதிக்கில் விநாயகமலைக்குப் பின் பக்கத்தில்ஜம்பூகன் என்ற ஓர் சூத்திரர் தலைகீழாக நின்றுகொண்டு மிகவும் குரூரமான தபஸ்செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். உடனே ராமர் மேற்படி ஜம்பூகனைத் தம்முடைய பாணத்திற்குஇரையாக்கிவிட்டார். ஜம்பூகன்கொல்லப்பட்டவுடன் உயிரிழந்த மேற்படி பிராமணரின் குழந்தை மறுபடியும் உயிர் பெற்றெழுந்தது என்று மேற்படி ராமாயணத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் நான்கு வருணத்தாரும் அவரவர்களுக்கேற்பட்ட தர்மங்களைத்தான் செய்யவேண்டுமேயொழிய அவரவர்களுக்குத் தகாததான காரியங்களைச் செய்தால் மேற்படி ஜம்பூகனுக்கு நேர்ந்த கதிதான் நேரிடும். ஆதலால் மகாத்மா காந்தியானவர் ராமராஜ்யத்தைப்போல் இருக்கவேண்டும் என்று சொல்லி விட்டு தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று சொல்வதானது மிகவும் தப்பானதும் அர்த்தமில்லாததுமானதாகும். ராமராஜ்யம் என்று சொல்லிக்கொண்டு தீண்டாமையை ஒழிப்பதற்காக என்னை யாராகிலும் அடித்தால்கூட அதைநான் மனப்பூர்வ

மாக சகித்துக்கொள்வேன் என்பதானது சற்றும் ஒவ்வாத பேச்சாகும். மேலும் மேற்படி மகாநாட்டில் பிராமணர்களுக்கும் தோட்டிக்கும் யாதொரு வித்தியாசமுமிருப்பதாக வேதத்தில் கூறப்படவில்லை என்பதாகச் சொல்லியிருக்கிறார். அநேகர்களால் போடப்பட்ட பாஷ்யங்களிலோ அல்லது நேரான மூலவேதங்களிலோ எந்த இடத்தில்மேல்படி விஷயம் சொல்லப்பட்டிருக்கின்றது? மகாத்மாகாந்தி அவர்களால் மேற்படி விஷயத்தைத்தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா? கலிமுடிய 5000 வருஷ மிருக்கும்போது உலகத்தில் சர்வ மதங்களும் சீர் கேடாகவும், கெட்டநடவடிக்கைகள் உள்ளதாகவும் ஆய்விடுமென்றும், அப்பொழுதும் திருநெல்வேலிஜில்லா தாம்பிர பரணி நதிக்கரையில் வாசம் பண்ணும் ஓர் பிராமணர் வமிசத்தில்தான் மகா விஷ்ணுவானவர் வந்து அவதாரம் செய்து துஷ்டர்களை சிக்ஷித்து தர்மத்தை ஸ்தாபனம்செய்யப்போகிறார் என்றும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சாஸ்திரங்களிலேயே பாபங்கள் ஜாஸ்தி யாக ஆக இந்தமாதிரி சீர்கேடெல்லாம் உண்டாகுமென்றும், அதற்கு சில மனிதர்கள் மூலகாரணமாக கிளம்புவார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ காவ்யகண்ட கணபதிசாஸ்திரிகள் முதலிய சில சாஸ்திரக்காரர்கள் தீண்டாமை என்பதே சாஸ்திரத்தில் கிடையாதென்றும், மேற்படி விஷயமாக சாஸ்திரங்களில் ஒன்றுமே சொல்லப்படவில்லை என்றும் ஒரே சாதிப்பாய் சாதிக்கிறார்கள். மேற்படியார்கள் தங்கள் வாதத்தை சரியாண காரணத்தோடும், அத்தாட்சியோடும் நிரூபிக்க முடியுமா ?

இப்படிக்கு சர்வமதங்களும்ஒன்றாகப்போகவேண்டுமென்று சொல்லிக் கொண்டுவரும் சமயத்தில் ஹிந்து மத தர்ம சொத்து பரிபாலன மசோதா சட்டமாகிவிட்ட விஷயமாய் பல பேர் துக்கிக்கிறார்கள். கண்டனக் கூட்டம் கூடுகிறார்கள். பிரசங்க மாரி பொழிகிறார்கள். ஆனால் ஹிந்து மதமே சீர்கேட்டையடையப் போகிற சமயத்தில் அந்த மத விஷயமாக இருக்கும் சொத்தும் இருந்தால் என்ன, போனால் என்ன ? ஸர்வ மதத்தினுடைய அடிப்படையான தத்துவத்தையும் தர்மத்தையும் அழிக்கக் கிளம்பியிருக்கிற இக்காலத்தில் மேற்படி மதங்களுக்,

காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டமும் சொத்தும் இருந்தும் இராததும் எல்லாம் ஒன்றுதான். " யானை செத்த பின் யானைத் தொரட்டி யாரிடத்திலிருந்தால் என்ன " என்று தமிழில் ஓர் பழமொழி இருக்கிறது. அதே மாதிரி தான் இதுவும் இருக்கின்றது. ஹிந்து மதத்திற்கு சென்ற இரண்டு வருஷகாலமாகவே ஏழரை நாட்டுச்சனியன் பிடித்துவிட்டது. மேல்படி மதங்களால் ஆராதிக்கப்படும் கோயில்களிலும் மற்றுமுள்ள இடங்களிலும் எல்லோரும் சேர்ந்தாற்போல்போகலாம் என்று ஏற்படும் பொழுது மேல்படி மதத்தின் தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டிருக்கும் சொத்தை யார் பரிபாலித்தால் தான் என்ன யார் அனுபவித்தால் என்ன? எல்லாம் ஒன்று தான். பொதுவாகப் பார்க்குமிடத்து இந்தியாவிற்கு கஷ்டகாலமும், துர்பிக்ஷமும் பிடித்து விட்டது. 1914-ம் வருஷத்தில் பெரிய யுத்தம் ஏற்பட்டு 1919-ம் வருஷம் வரையிலும் அது ஜனங்களை கஷ்டப்படுத்தியது. பிறகு காங்கிரஸ் என்பதில் தீண்டாமை என்றும் இன்னும் அநேக விதமான தீர்மானங்களும் முடிவாகி ஜனங்களின் மனதை அலைத்து வருகின்றன. மற்றொரு புறத்தில் கவர்ன்மெண்டார் அவர்கள் புதிது புதிதான வரியினாலும் முறைகளாலும் ஜனங்களை வாட்டுகின்றார்கள். இந்தியாவானது நடுவில் அகப்பட்டுக்கொண்டு ' இருதலைக் கொள்ளி எறும்புபோல் ' தத்தளிக்கிறது. ஒரு பக்கம் காங்கிரஸ்காரராலும், மற்றொரு பக்கம் கவர்ன்மெண்டாராலும் அலைக்கப்பட்டு வருகிறது. இவ்வித நிலைமையில் ஜனங்களுக்கு இன்னது செய்வதென்று தெரியாமல் இருக்கும் ஓர் ஸ்திதியில் சுயராஜ்யம் என்பது ஸ்வப்பனத்திலும் நினைக்கமுடியாததாக இருக்கின்றது. இந்தியாவிற்கு சுயராஜ்யம் சம்பாதித்து வைக்கவேண்டுமென்று கிளம்பி இருக்கும் மகாத்மா காந்தி முதலியோர்கள் செய்யப் பட்டுவரும் காரியங்கள் ஒன்று கூட நடக்கவில்லை என்பதை நாம் பிரத்தியக்ஷத்தில் காணலாம். அவர்கள் இன்னும் மேற்படி தீர்மானங்களையே நிர்ப்பந்திப்பார்களேயானால்இந்தியாவைசுயராஜ்யத்தோடுபார்க்க வேண்டுமென்ற எண்ணத்திற்கு நேர்மாறாக! இந்தியாவில் உள்ள சர்வமதங்களும் ஒன்றுக்கொன்று சதா சண்டையிடக் கூடும்என்

பதைக் கட்டாயம் பிரத்தியக்ஷத்தில்பார்ப்பார்கள். ஆகையால் தீண்டாமையை வற்புறுத்தாமல் சம்பாதிக்கக் கூடிய சுயராஜ்யம் எதுவோ அதற்குண்டான முயற்சிகளைத் தேடும்படியாய் மேற்படி தலைவர்களை வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில மாதங்களுக்கு முன் சுதேசமித்திரனில் வெளியூர் வர்த்தமானங்கள் என்ற தலைப்பின் கீழுள்ள ஓர் ஊரில் (ஊர் ஞாபகமில்லாததற்கு மன்னிக்கவும்) தீண்டாமைஒழிக்கக்கூடாது என்று எழுதப்பட்ட ஓர் அநாமதேயக் கடிதம், மேற்படியூர் காங்கிரஸ் ஆபீஸில் கண்டு எடுக்கப்பட்டதாகப் பிரசுரம் செய்யப் பட்டிருப்பதை நேயர்கள் கவனித்து இருக்கலாம். அது சுத்த தப்பும் பயங்கொள்ளித் தனமுமான காரியமுமாகும். அப்படிக்கல்லாமல் மேற்படியார்கள் தைரியமாய் முன் வந்து தீண்டாமை இன்னின்ன காரணங்களால் ஒழிக்கக் கூடாது என்று கண்ணியத்தோடும், நியாயத்தோடும் சொன்னால் அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடியாதக இருக்கும்.

ஆகையால் இதை எனக்குத்தெரிந்தவரையில் ஏதோ எழுதினேனேயொழிய சாஸ்திரங்களில் நன்றாகப்பாண்டியத்யம் கிடையாது. ஷெ விஷயமாக அப்பியசித்திருப்பவர்களும் நமது தென்னிந்தியாவில் உள்ள மஹாமஹோபாத்தியர்கள், சாஸ்திர திலகர்கள் முதலியவர்களும் தீண்டாமையை விலக்கவேண்டும் என்று கிளம்பி இருக்கும் மகாத்மா காந்தி முதலிய பிரபல தலைவர்களுக்கும் ஸ்ரீ காவ்யகண்டன கணபதி சாஸ்திரிகள் முதலிய சாஸ்திர வித்வான்களுக்கும் நன்றாய்த் தெரியும்படி ஓர் மறுப்புரை எழுதும்படி மிகுந்த வணக்கத்துடன் இந்தச் சிறிய வியாசத்தின் மூலமாய்க் கேட்டுக் கொள்கிறேன். ஆகையால் தீண்டாமை விஷயத்தைப் பற்றி மேற்படி வித்வான்கள் தங்களுக்கு சாத்தியமான முறையில் பத்திரிகைகளின் மூலமாய் வெளியிடுவார்கள் என்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டே இதை நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

மகாத்மா காந்தியும் வைக்கம் ஸத்தியாக்கிரஹமும்.

இரண்டுமூன்று தினங்களாக வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களைக் கவனித்தால், மகாத்மா காந்தியவர்கள் இம்மாதம் முழுவதும் தமிழ்நாட்டிற் பிரயாணம் செய்வார்கள் என்றும், அதற்கு முன்பாக வைக்கம் ஸத்தியாக்கிரகிகளைப் பார்த்துத் தமது அபிப்பிராயத்தையோ, வேண்டுமானால் தாமே முதன்மையாயிருந்து எல்லாவற்றையும் திருப்திகரமாக நடத்தவோ தீர்மானம் செய்துகொண்டே வருவதாகப் புலப்படுகிறது.

தீண்டாதார் எனப்படுவோர் முன்னேற்றமடைவதை எவரும் மறுப்பதற்கில்லை; எனவே அது யாவசாலும் ஒப்புக்கொள்ளத்தக்கதேயாம். ஆயினும் வைக்கத்தில் ஷெடி தீண்டாதாரை (ஒடுக்கப்பட்டவர்களை) முன்னேற்றுவிக்கும் நோக்கத்துடன் இந்த ஸத்தியாக்கிரகஉணர்ச்சி உண்டாயிருப்பதாகக்காணவில்லை. மற்றென்றேவெனில். எண்ணிக்கையில் மிகவுங் குறைவாகவும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் மிகவுங் குன்றியவர்களாகவும், அரசாங்கநிர்வாகத்திலேதம் வகுப்பாருக்குப்பிரதமமானபதவிகள் வேண்டுமென்று போராடாதவர்களாகவும்,கலிகாலக் கொடுமையினாலே இதர வகுப்பார்களின் அசூயைக்கும் வெறுப்புக்கும் பாத்திரர்களாக இருப்பவர்களாகவுமான பிராமணவகுப்பினர் என்னும் சாந்தகுணமுள்ளவர்மீது மற்றையோர் கொண்டிருக்கும் வெறுப்பேயன்றி வேறல்ல.

யாதுகாரணம் பற்றியோ சில ஸ்நானகட்டங்களிலும் ஆறு, குளம், கிணறு, கேணிபோன்ல நீர் நிலையங்களிலும், சிற்சில முக்கிய வீதிகளிலும், சிற்சில தேவஸ்தானங்களிலும் குறிப்பிட்ட பிரகாரங்கள் வரையிலும், மேற்குறித்த சாதியர்களது சம்மதமின்றி ஆராதனைகளைச் செய்யவோ புராண இதிகாஸங்கள் பாராயணம் பண்ணவோ, வேதம் முதலிய அனுஸந்தானம் செய்யவோ உரிமைகொண்டவர் பிராமணர், இவ்வித பிராமணவகுப்பாரது உரிமைகளை இதுவரை இதாசாதியார் எவரும் துச்சமாகக் கருதியவரல்லர்; அவரவர் தத்தம் தர்மத்திற்கேற்றவாறு நடந்துவந்தார்கள். 'அரிதரிது மானிடராதல அரிது' என்னும் முதுமொழிக்கிணங்க, பகுத்தறிவுள்ள மானிடஜன்மம் எத்தனையோ புண்யங்களைச்செய்து சித்திப்பதாகும்; இத்தகைய புண்யஜன்மத்தைச் சற்காரியங்களால் சாபல்யப்படுத்தி பாவனமாக்கிக்கொள்வதே அந்த ஜன்மமெடுத்ததன்பலன். அதற்கு எல்லாம்வல்ல இறைவனை சிந்திப்பதும், அடிதொழுவதும், அவனது கருணையங்கடலைப் போற்றுவதுமே புகழத்தக்கது. சகலவிதமான சேதன, அசேதனப் பொருள்களில் ஈசுவரஸாந்நித்யம் இருப்பது மாயப் பிரபஞ்சத்து மானிடர் ஊனக்கண்களுக்குப் புலப்படுவதில்லை.

அதல்லாமல் யாரையும் தனது ஆத்மாவெனவே மதித்து உதவி புரிவது தர்மமாகும் அங்ஙனமே இந்து மதத்திலுள்ள சகல வர்ணத்தவர்களும் ஒருவருக்கொருவர் ஐக்கியமத்தியம் பாராட்டிவந்திருக்கிறார்கள். காலமாறுபாடால் பிராமணருள் பலர் தமது முழுமுதற்கடமையினின்றும் பிறழ்ந்திருக்கிறாரென்றாலும், அது காரணமாக அவர்களுக்குள்ள உரிமைகளுக்கு லோபம் உண்டாக்குவது மற்றவர் அனுசரிக்குந் தர்மத்திற்கு ஏற்றதல்ல. மகாத்மா காந்தியடிகள் சிலதினங்களுக்குமுன் அறிவித்திருந்தத் தந்திச் செய்தியொன்றில் காட்டியபடி வைக்கம் மகாதேவர் ஆலயத்திலும் அவர் தீண்டாதாரைப் பிரவேசிக்கச்செய்வது நிச்சயம்.

ஆகவே பிராமணசகோதரர்காள், நாம் ஆலயத்தினுட்சென்று தரிசனமோ சேவையோ புரிந்தால்தானா மகாதேவர் திருப்தி கொள்வார்? தர்மம் அகன்றகாலத்து நம்மால் இயன்றவரையில் ஸ்வதர்மத்தை யனுஷ்டிப்பதுதான் முறை நாமெந்த சகுணோபாசனை செய்யும்போதும் நமது இருதயகமலத்திலிருக்கும் முகூர்த்தத்தையே பூஜைசெய்ய ஏற்பட்ட முகூர்த்தத்தில் ஆவாகனம் செய்து பூஜிப்பது வழக்கமாயிருக்கிறது. ஞானியானவன் 'அகம் பிரம்மாஸ்மி' என்ற வேதவாக்கின்படி தன்னகத்தேயுள்ள பிரம்மத்தை மானஸீகமாகப் பார்த்து ஆனந்திப்பான். பக்தியெனும் பாசத்தால் கட்டுண்ட பக்தனோ சகல ஜீவராசிகளிலும் பிர்மத்தைப் பார்ப்பான். ஆதலால் பிராமணர்களும் மற்ற இந்துமதத்தவர்களும் ஸத்தியாக்கிரக விரதத்தோடு நடத்தவேண்டும். எவ்விதமெனில் இதுகாறும் கட்டடங்களிலும் கோவில்களிலும் தீண்டாதார் புகுந்தார் என்ற வழக்கமில்லை. அந்தவழக்கம் இப்போதேற்படுமானால், மெய்ப்பக்தர்களாயிருப்பவர்கள் எவ்வித தடங்கலும் செய்யாது விலகி நிற்பதே நேர்மையாகும். மகாதேவரையோ மற்றெந்த சொந்த தேவதைகளையோ அவரவர் தத்தம் கிரகங்களில் வைத்துப் பூஜைசெய்து பேரானந்தம் அடையலாம். தீண்டாதார் வழக்கவிரோதமாக நேரும் கட்டடங்களுக்கோ ஆலயங்களுக்கோபிராமணர்கள்போய்த்தானாகவேண்டுமென்பதில்லை. அங்ஙனம் விலகிநிற்பதால் பிராமணர்களுக்கு எவ்விதத் தீங்கும் நேராது. தர்மத்திற்சிறந்தது அஹிம்ஸா தர்மமே; அதைப் பிராம்மணர் கைப்பிடித்து நடப்பாராயின், கருணைக்கடலாகிய பகவான், சகல தர்மத்தையும் நிலைநாட்டச் செய்வாரென்பது நிச்சயம்; அதுவே ஸத்தியம். ஸத்தியமுண்டானால் ஜயமுண்டு. ஆனது பற்றி ஒருபோதும் ஸத்தியத்தைக் கைவிடல் கூடாது.

(இந்து நேசன்.)